DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**CC.No. 123/2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | PW 1 | Caste | : | |
| Name | : | ஜெயமுருகன் | Age | : | |
| FN. | : | | Occupation | : | |
| Village | : | சேரான்தை | | | |
| Taluk | : | | | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 29th day of September 2022.
29.09.2022.

முதல் விசாரணை:-

1. நான் சேராந்தையில் குடியிருந்து வருகிறேன். கொத்தனாரா வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை மணிகண்டனை தெரியும். டோயோடா காரை ஓட்டி வந்தார். கடந்த 22.09.2019-ம் தேதி காலை சுமார் 10.45 மணியளவில் கடுக்காமலை அருகே நானும், சசிக்குமார் என்பவரும் எனக்கு சொந்தமான TN 65 U 3682 என்ற பதிவெண் கொண்டு இரு சக்கர வாகனத்தை நான் ஓட்ட சசிக்குமார் என்னுடன் அமர்ந்து வந்தார். நாங்கள் மேற்கில் இருந்து கிழக்காக ரோட்டில் இடது பக்கதில் வந்த கொண்டிருந்த போது எங்களுக்கு எதிர் திசையான கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி டோயோடா காரை ஆஜர் எதிரி ஸ்பீடாக ஓட்டி வந்து எங்களது இரு சக்கர வாகனத்தில் மோதிவிட்டார்.

2. நான் சாலையின் இடது பக்கமும், சசிக்குமார் என்பவர் வலது பக்கமும் விழுந்து விட்டோம். எனக்கு தலை, வலது தோள் பட்டை, வலது காலில் அடி பட்டு, முழுவதுமாக சிராய்ப்பு காயங்கள் இருந்தது. சசிக்குமாருக்கு தலை நசுங்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் எங்கள் இருவரையும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள்

3.சசிக்குமாரை பரிசோதித்த மருத்துவர் அவர் இறந்து விட்டதாக கூறினார். நான் ஒரு மாதம் உள்நோயாளியாக சிசிக்சையில் இருந்தேன். நான் மருத்துவமனையில் சிசிக்கையில் இருந்த போது மண்டபம் போலீசார் அங்கு வந்து என்னிடம் புகார் மனு வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் 7 வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் சரளமாக எழுத தெரியுமா என்றால் சரளமாக எழுதமுடியாது. எனக்கு காயம் முழுவதும் வலது பக்கம் தான் ஏற்பட்டது. எனக்கு வலது கையிலும் காயம் ஏற்பட்டது. நான் எழுதுவதற்கு வலது கையை தான் உபயோகிப்பேன். எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டதால் புகாரை எழுதுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் நான் சொல்லச் சொல்ல எழுதினார்கள். நான் எழுதவில்லை.

2. புகாரை நான் சொல்லச் சொல்ல ஏட்டைய எழுதினார். அந்த ஏட்டையா பெயர் தெரியாது. சம்பவ நேரத்தில் எனது வண்டிக்கு இன்சூரன்ஸ், ஆர் சி புக், மற்றும் ஓட்டுனர் உரிமம் இருந்ததா என்றால் இருந்தது .அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள AIR form ல் எனது வண்டிக்கு இன்சூரன்ஸ் மற்றும் ஆர் சி புக் இல்லை என சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

3. பொதுவாக கொத்தனார் வேலைக்கு போவது என்றால் எத்தனை மணிக்கு செல்வீர்கள் என்றால் காலை 10 மணிக்கு செல்வோம். நான் எனது இருசக்கர வாகனத்தை முறையாக பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் வைத்து விசாரிக்கும் போது மணி 12 இருக்கும். இந்த வழக்கு சமபந்தமாக என்னை போலீசார் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். 2 தடைவை விசாரிக்கும் போதும் நான் வாக்குமூலம் கொடுத்தேன். கையொப்பமும் செய்தேன்.

4. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மதுரை டு இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலை என்பதால் அந்த ரோடு எப்போதும் பரபரப்பாக இருக்கும் என்றால் சரிதான். அதனால் உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் அங்கு மக்கள் கூடியிருப்பார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகளான 2 முதல் 7 வரையிலான சாட்சிகள் அனைவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

5. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் அக்கம் பக்கத்தினர் வந்திருப்பார்கள் அவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை. நான் தவறுதலாக வாகனத்தில் வந்துவிட்டு எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு இடது பக்கத்திற்கும், வலது பக்கத்திற்கும் வித்யாசம் தெரியும். நான் வந்த பாதை மண்ரோடும், தார்ரோடும் சேர்ந்தது தேசிய நெடுஞ்சாலைக்கு இடது புறம் என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் இடது புறத்தில் விபத்து ஏற்பட்டதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.எனது புகாரில் என் வாகனம் இடது பக்கமாக போனதாக சொல்லவில்லை என்றால் சரிதான் ( சாட்சி புகார் மனுவை படித்துப் பார்த்தார் இடது பக்கமாக போனதாக சொல்லவில்லை).

6. எதிரி அவருடைய வாகனத்தில் சரியான திசையில் தான் வந்தார். நானும், சசிக்குமாரும் வாகனத்திற்கு லைசன்ஸ் இல்லாமல் போதையில் ஓட்டி சென்று எதிரி வாகனத்தின் மீது மோதிவிட்டோம் என்றால் சரியல்ல. நான் சரியான திசையில் வானத்தை ஓட்டி வந்திருந்தால் ரோட்டின் மையப்பகுதிக்கு போவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். நான் போன திசையில் எங்களுக்கு முன்பு அரசு பேருந்து இராமேஸ்வரத்தை நோக்கி வந்ததா என்றால் சரிதான். அந்த பேருந்தை முந்தி சென்றோமா என்றால் இல்லை.

7. உண்மையில் அந்த பேருந்தை முந்தி செல்ல முயற்சி செய்யும் போது எனது வண்டி கேன்பார் பேருந்தில் பட்டு நடுரோட்டில் தூக்கி வீசப்பட்டேன் என்றால் சரியல்ல. பஸ்சில் அடிபட்டதால் பஸ்சிற்கு இன்சூரன்ஸ் இல்லாததால் போலீசார் தயார் செய்த வழக்கில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

8. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு 100 மீ தள்ளி ராஜா கல்லூரி உள்ளது.அதற்கு எதிர் திசையில் மதுரையை நோக்கி பேகக்கூடிய பஸ் ஸ்டாப், கிராமம் உள்ளது அதில் பிள்ளையார்கோவில் உள்ளது. அங்கு சுமார் 10, 20 குடியிருப்புகள் உள்ளது. கல்லூரி என்பதால் அங்கு சிறு சிறு வேகத்தடைகள் இருக்கும் என்றால் சரிதான். அதேபோல் பஸ் ஸ்டாப்பிற்கும் இடையில் வேகத்தடை உள்ளது. பஸ் ஸ்டாப்பிற்கும் ராஜா கல்லூரிக்கும் 100 மீ தூரம் தான் இருக்கும். நான் சொல்வது போல் விபத்து ஏற்பட்டிருந்தால் எதிரியின் வாகனம் வேகத்தடையை தாண்டி வேகமாக வரமுடியாது என்றால் சரியல்ல.

9.அன்றைய தினம் வேலைக்கு எங்கிருந்து சென்றேன் என்றால் தங்கச்சிமடத்தில் இருந்து ராஜா நகருக்கு வேலைக்கு சென்றோம். ராஜா நகரில் நடைபெற்றது யார் வேலை என்றால் இன்ஜீனியர் சிதம்பரம் அவர்கள் வேலை. அவரிடம் நான் கூலிக்கு தான் வேலைப்பார்த்தேன். எல்லா ஊரிலும் கூலிக்கு வேலை செல்வதற்கு காலை 9 மணிக்கு இன்ஜீனியரிடம் இருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் ஆள் வைத்து வேலை எடுப்பதால் எல்லா நபர்களையும் வேலைக்கு அனுப்பிவிட்டு நான் சென்றேன்.

10. சம்பவத்திற்கும், எதிரியின் வண்டிக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும், நானும் சசிக்குமாரும் போதையில் இருந்ததால் தான் விபத்து ஏற்பட்டதற்கு காரணம் என்றால் சரியல்ல. எனக்கு கையில் அடிபட்டிருந்ததால் புகார் கையொப்பம் போடமுடியாது என்றால் சரியல்ல. விபத்து முழுக்க முழுக்க எனது கவனக்குறையால் எற்பட்டது எதிரியால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

11. சசிக்குமார் தரப்பில் விபத்து நஷ்டயீடு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதனால் தான் இந்த வழக்கில் இன்சூரன்ஸ் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி

வருகிறார்கள்  என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன மாறி, சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.